சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – விடுதிகள் – 2012–2013–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த சிறப்பு பயிற்சி அளித்திட ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1)த் துறை

அரசாணை (நிலை)எண். 111 நாள்: 08.10.2012

படிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரின் கடித எண். பி2/1840/2012, நாள். 11.5.2012.

---

ஆணை:-

2012–2013–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்த ஒருவருக்கு ரூ.2,800/– வீதம் 6,550 மாணவ, மாணவியருக்கு சிறப்பு பயிற்சினை ரூ.1.83 கோடி செலவில் அளிக்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் 160 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி / தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி விடுதிகளில் தங்கி பயிலும் சுமார் 6550 மாணவ, மாணவிகள் தற்போதைய காலக்கட்டத்தில், பன்னாட்டு தகவல்களை பரிமாறுவதற்கு ஆங்கில மொழி மிகவும் இன்றியமையாத கருவியாக உள்ள காரணத்தினால் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சியினை 2012–2013–ஆம் ஆண்டு அளிப்பதற்கு பயிற்சி குறித்த வரைமுறை மற்றும் இதர கட்டுப்பாடுகள் ஆகியவை இணைப்பு–I-ல் உள்ளவாறு கடைபிடிக்கலாம் என்று பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

3. மேலும், இப்பயிற்சி திட்டத்தில் பயன்பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளின் மாவட்ட வாரியான விவரத்தின்படி (இணைப்பு –II–ல் உள்ளவாறு) இப்பயிற்சி திட்டத்தில் தகுதியுள்ள பயிற்சி நிறுவனங்களை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–இன்படி பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களால் தேர்வு செய்யவும் பயிற்சிக்கான தொகையினை ஒப்பளிப்பதற்கு ஏதுவாக இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியினை பயிற்சியாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் மூலம் பகிர்வு செய்யவும் உரிய ஆணைகளை பிறப்பிக்குமாறும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட விடுதி மாணவ, மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப இப்பயிற்சியினை அளிப்பதற்கு ஏதுவாக அரசாணையினை வெளியிடுமாறும், இப்பயிற்சிக்கான கட்டணம் ஒரு நபருக்கு ரூ.2,800/– (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) வீதம் 6550 மாணவ, மாணவிகளுக்கு ரூ.1,83,40,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) தொகையினை பயிற்சி கட்டணமாக ஒப்பளிப்பு வழங்க ஆணை பிறப்பிக்குமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே பத்தி 3–ல் கண்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆராய்ந்து, 2012–2013–ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில் உள்ளவாறு 160 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றலை மேம்படுத்தும் திட்டத்தினை இணைப்பு–I–ல் உள்ள விதிமுறைகளின்படி செயல்படுத்திடவும், இப்பேச்சாற்றல் பயிற்சி அளிப்பதற்கு ஒரு நபருக்கு ரூ.2800/– வீதம் இணைப்பு –II–ல் கண்டுள்ளபடி 6550 கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.1,83,40,000/–யை (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) பயிற்சி கட்டணமாக ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. இச் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்டோர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 72 பயிற்சிகள்".

(து.தொ.கு. 2225–03–277–JA-7207) – **ரூ.1,18,86,000/–**

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்டோர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 72 பயிற்சிகள்".
(து.தொ.கு. 2225–03–277–KA-7206) – **ரூ.50,96,000/–**

<u>சீர்மரபினர் நல விடுதிகள்</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – பிற்படுத்தப்பட்டோர் நலன் – 80 – பொது – 101 – சீர்மரபினர் மற்றும் நாடோடி இனத்தவர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JH – சீர்மரபினர் மாணவரில்லங்கள் – 72 பயிற்சிகள்".
(து.தொ.கு. 2225–80–101–JH-7201) – **ரூ.10,08,000/–**

<u>சிறுபான்மையினர் நல விடுதிகள்</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்டோர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 72 பயிற்சிகள்".
(து.தொ.கு. 2225–03–277–LA-7205) – **ரூ.3,50,000/–**

--------------

ஆக மொத்தம் – **ரூ.1,83,40,000/–**

--------------

**6.** மேலும், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரால் தேர்வு செய்யப்படும் தகுதியுள்ள பயிற்சி நிறுவனங்களுக்கு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** மற்றும் விதிகள் **2000**–ன்படி இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் தொகையினை பயிற்சியாளர் எண்ணிக்கைக்கேற்ப தொடர்புடைய மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் மூலம் பகிர்வு செய்திடவும் ஆணையிடப்படுகிறது.

**7.** இது ஒரு "புதுப்பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வரையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது –I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகையை

முன்பணமாக வாங்குவதற்கான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் நிதி (வரவு–செலவு பொது I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை துணைமானியக் கோரிக்கையில் சேர்த்திட உரிய விளக்கக் குறிப்பினை உரிய தருணத்தில் அரசுக்கு தவறாமல் இச்செலவினத்தை சேர்த்து அனுப்புமாறும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.எண். 45/கூ.செ./2012, நாள். 03.08.2012–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 857 (எண்ணூற்று ஐம்பத்தேழு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்:
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை – 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை – 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை– 2.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 1), சென்னை – 18 (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (துணிக்கை– 2), சென்னை – 18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாவட்ட வருவாய் அலுவலர் (க.சீ.), மதுரை.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
**நகல் :**
முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை – 9.
நிதித் (பி.மி.பி/வ.செ.பொது1/ வ.செ. பொது 2) துறை, சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்)
அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்
(பிந3/சிநஆபி.) துறை, சென்னை –9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

# இணைப்பு– I

## அரசாணை (நிலை) எண். 111, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 08.10.2012.

| | |
|---|---|
| பயிற்சியின் பெயர் | பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி பயிலும் 6550 மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி. |
| பயிற்சி நிறுவனத்தை தேர்வு செய்யும் முறை | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000. |
| பயிற்சி அளிக்கப்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை | 6550 |
| பயிற்சி காலம் | 10 மாதம் |
| கற்பிக்கப்படும் பொருள் | பணிசார்ந்த மொழி கற்பித்தல் முறை மூலம் ஆங்கில மொழி தகவல் பரிமாற்றம். |
| | 1. தினந்தோறும் ஏற்படும் வெளிப்பாடு மற்றும் நடைமுறைக்கு தேவைப்படும் மிகவும் அடிப்படையான சொற்றொடர்கள்.<br>2. தனிப்பட்ட விவரங்கள் தொடர்பான கேள்விகள் கேட்பது மற்றும் பதில் அளித்தல்.<br>3. பிரபலமான தலைப்புகளிலிருந்து குறுகிய வார்த்தைகளை புரிந்து கொள்ளுதல் குறியீடுகள், அறிகுறிகள், எளிமையான சொற்றொடர்கள் மற்றும் ஆவணங்களில் உள்ள குறுகிய வாக்கியங்கள் ஆகியவற்றின் மூலம் தகவல்களை பெறுதல்.<br>4. அடிக்கடி பயன்படுத்தப்படும் வெளிப்பாடுகள் மற்றும் வாக்கியங்கள் ஆகியவற்றை புரிந்து கொள்ளுதல்.<br>5. தேவையான பணிகளை மேற்கொள்ளவும், தகவல்களை பரிமாறுவதற்கும் தொடர்பு கொள்ளுதல்.<br>6. அறிவியல், நன்கு அறிந்த ஆதாரங்கள் மற்றும் குறியீடுகள் மூலம் தகவல்களை பெறுதல்.<br>7. குறிப்பிட்ட பார்வையாளர்களைப் பற்றிய தகவல்களை விழிப்புணர்வுடன் எழுதுதல்.<br>8. தரப்படுத்தப்பட்ட தகவல்களை தெளிவாக புரிந்து கொள்ளுதல்.<br>9. பிரபலமான தலைப்புகளிலிருந்து தகவல், உணர்வுகள் மற்றும் கருத்துகளை தெரிவித்தல்.<br>10. பகிர்ந்து புரிந்து கொள்ளுதலை அடைய விவாதத்தில் ஈடுபடுதல்.<br>11. நிகழ்வுகள், நம்பிக்கைகள் மற்றும் குறிக்கோள்கள் குறித்த அனுபவங்களை விவரித்தல். |

| | |
|---|---|
| | 12. சிக்கலான தகவல்கள் பரிமாற்றத்தில் முக்கிய யோசனைகளை புரிந்து கொள்ளுதல்.<br>13. சரளமாகவும், தன்னிச்சையாகவும் பேசும் அளவிற்கேற்ப விவாதத்தில் ஈடுபடுதல்.<br>14. பரிச்சயமான மற்றும் அனுபவம் இல்லாத சூழ்நிலைகளில் ஈடுபடுதல்.<br>15. பொருத்தமான நோக்கம் மற்றும் அவற்றிற்குரிய பார்வையாளர்களை விரிவாக தொடர்பு கொள்ளுதல். |
| விடுதி மாணவ, மாணவிகளை தேர்வு செய்யும் முறை | தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் 2000–ன்படி இயக்குநரால் தேர்வு செய்யப்படும் பயிற்சி நிறுவனங்களில் மூலம் 160 கல்லூரி / தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி விடுதிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முன் தேர்வு நடத்தப்பட்டு மிகவும் விருப்பமுள்ள மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்படுவர். இதன் அடிப்படையில் சம்மந்தப்பட்ட மாவட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மொத்த மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப சுருக்க பட்டியல் தயார் செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். |
| பயிற்சி நடைபெறும் இடம் | மாவட்ட தலைநகரிலோ அல்லது மாவட்ட தலைநகருக்கு அருகிலோ உள்ள ஒன்று அல்லது இரண்டு கல்லூரி விடுதிகளில் அல்லது பயிற்சி நிறுவனத்தால் தேர்வு செய்யப்படும் இடம். |
| பயிற்சி கட்டணம் (ரூபாயில்) | உத்தேச பயிற்சி கட்டணம் ஒரு மாணவ, மாணவியருக்கு ரூ.2,800/– வீதம் 6550 நபர்களுக்கு ரூ.1,83,40,000/–. |

**தங்க கலியபெருமாள்,**
**அரசு செயலாளர்.**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்.**

# இணைப்பு– II

**அரசாணை (நிலை) எண். 111, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள். 08.10.2012–ன்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி / தொழிற்நுட்ப / தொழிற்பயிற்சி விடுதி மாணவ, மாணவிகளுக்கு ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கும் விடுதிகளின் விவரம்**

| வ. எண். | மாவட்டம் | பி.வ. | | மி.பி.வ. | | சீ.ம. | | சி.பா. | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | விடுதிகள் | மாணவ, மாணவிகள் | விடுதிகள் | மாணவ, மாணவிகள் | விடுதிகள் | மாணவ, மாணவிகள் | விடுதிகள் | மாணவ, மாணவிகள் | விடுதிகள் | மாணவ, மாணவிகள் |
| 1 | சென்னை | 8 | 320 | 4 | 180 | | 0 | | | 12 | 500 |
| 2 | காஞ்சிபுரம் | 4 | 170 | 2 | 80 | | 0 | | | 6 | 250 |
| 3 | திருவள்ளூர் | 1 | 100 | | 0 | | 0 | | | 1 | 100 |
| 4 | வேலூர் | 3 | 90 | 3 | 110 | | 0 | 1 | 25 | 7 | 225 |
| 5 | திருவண்ணாமலை | 1 | 30 | 3 | 120 | | 0 | | | 4 | 150 |
| 6 | கடலூர் | 4 | 150 | 3 | 150 | | 0 | | | 7 | 300 |
| 7 | விழுப்புரம் | 1 | 30 | 3 | 120 | | 0 | | | 4 | 150 |
| 8 | தர்மபுரி | 1 | 40 | 1 | 60 | | 0 | | | 2 | 100 |
| 9 | கிருஷ்ணகிரி | 1 | 90 | 3 | 110 | | 0 | | | 4 | 200 |
| 10 | சேலம் | 4 | 180 | 4 | 120 | | 0 | | | 8 | 300 |
| 11 | நாமக்கல் | 3 | 100 | 1 | 50 | | 0 | | | 4 | 150 |
| 12 | கோயம்புத்தூர் | 4 | 300 | | 0 | | 0 | 1 | 25 | 5 | 325 |
| 13 | ஈரோடு | 2 | 100 | | 0 | | 0 | | | 2 | 100 |
| 14 | திருப்பூர் | 3 | 150 | | 0 | | 0 | | | 3 | 150 |
| 15 | நீலகிரி | 5 | 150 | | 0 | | 0 | | | 5 | 150 |
| 16 | திருச்சி | 8 | 370 | 1 | 50 | 1 | 30 | 1 | 25 | 11 | 475 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | அரியலூர் | 1 | 30 | 2 | 70 | | 0 | | | 3 | 100 |
| 18 | பெரம்பலூர் | 0 | 0 | 2 | 100 | | 0 | | | 2 | 100 |
| 19 | கரூர் | 2 | 70 | 2 | 80 | | 0 | | | 4 | 150 |
| 20 | புதுக்கோட்டை | 5 | 300 | | 0 | 3 | 150 | | | 8 | 450 |
| 21 | தஞ்சாவூர் | 8 | 325 | 3 | 100 | 1 | 50 | | | 12 | 475 |
| 22 | திருவாரூர் | 3 | 110 | 2 | 90 | | 0 | | | 5 | 200 |
| 23 | நாகப்பட்டினம் | 1 | 30 | 2 | 70 | | 0 | | | 3 | 100 |
| 24 | மதுரை | 4 | 200 | | 0 | | 0 | | | 4 | 200 |
| 25 | தேனி | 2 | 80 | 1 | 20 | | 0 | | | 3 | 100 |
| 26 | திண்டுக்கல் | 3 | 120 | 1 | 30 | | 0 | 1 | 25 | 5 | 175 |
| 27 | இராமநாதபுரம் | 1 | 50 | | 0 | 3 | 100 | | | 4 | 150 |
| 28 | சிவகங்கை | 3 | 140 | 2 | 60 | | 0 | | | 5 | 200 |
| 29 | விருதுநகர் | 2 | 100 | | 0 | | 0 | | | 2 | 100 |
| 30 | திருநெல்வேலி | 3 | 120 | | 0 | 1 | 30 | 1 | 25 | 5 | 175 |
| 31 | தூத்துக்குடி | 1 | 50 | 1 | 50 | | 0 | | | 2 | 100 |
| 32 | கன்னியாகுமரி | 4 | 150 | | 0 | | 0 | | | 4 | 150 |
| 33 | மா.வ.அ.(க.சீ), மதுரை | | | | 0 | 4 | | | | 4 | 0 |
| **மொத்தம்** | | **96** | **4245** | **46** | **1820** | **13** | **360** | **5** | **125** | **160** | **6550** |

**தங்க கலியபெருமாள்,**
**அரசு செயலாளர்.**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்.**